සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(I)

காலம் - 03 மணிக்கியாலங்கள்

## நிருவாகம் - (02-I)

විභාග අංකය
Index No / சுட்டெண்
....................................

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

01. இலங்கை நிருவாக சேவை இரண்டாம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான கௌசல்யா கலாநிதிப் பட்டத்தை நிறைவுசெய்யும் முகமாக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இரண்டு வருடங்களுக்கு முறையாக வெளிநாட்டு லீவினைப் பெற்று தற்போது வெளிநாட்டில் உள்ளார்.

   i. ஏற்புடைய வெளிநாட்டு லீவினைப் பெற்றுக்கொள்ள கௌசல்யா பின்பற்றியொழுக வேண்டிய நிர்வாக ஏற்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. தனக்கு 14/2022 சுற்றறிக்கையின் கீழ் லீவினை நீடித்துக்கொள்வதற்கு உள்ள சந்தர்ப்பம் தொடர்பில் கௌசல்யா தனது சேவை தோழியான தங்களிடம் வினவுகின்றார். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தாங்கள் அவருக்கு வழங்கும் வழிகாட்டல் எத்தகையது? (10 புள்ளிகள்)

02. சுரகம பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் திரு. செத்சிறி "பெரேதா" நாளிதழுக்கு "நான்" எனும் புனைப் பெயரில் வாராந்தம் பத்தி எழுத்து எழுதுவதாக சுரகம பிரதேச செயலாளருக்கு போலியான பெயரில் எழுத்துமூல முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளபடி "நான்" என்பவரால் அரசாங்க சேவைக்கு ஏற்புடைய சில கொள்கை ரீதியான மற்றும் அரசியல் தகவல்கள் மிகவும் ஏளனமாக விமர்ச்சிக்கப்படுவதாக அங்கு மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

   i. திரு.செத்சிறி "நான்" எனும் பத்தி எழுத்து எழுதுவது குற்றமொன்றாயின் அவர் அரசாங்க சேவையின் எந்த நிர்வாக ஏற்பாடுகளை மீறியுள்ளார்? (10 புள்ளிகள்)

   ii. சுரகம பிரதேச செயலாளர் தாங்கள் எனின், வெகுசன ஊடகங்களுடன் முறையாக உறவைப் பேணுவது தொடர்பில் திரு.செத்சிறிக்கு எவ்வாறான அறிவுறுத்தல்களை வழங்குவீர்? (10 புள்ளிகள்)

03. நிர்மாண ஊக்குவிப்பு அமைச்சில் சில துரித அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நிபுணத்துவ உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கிணங்க, இந்த அமைச்சில் பணியாற்றிய திரு.சேனாபதி மற்றும் திரு. புஞ்சிபண்டார ஆகியோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். எனினும், திரு.புஞ்சிபண்டார அரசாங்க சேவையில் மீண்டும் ஈடுபடுத்துவதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

i. திரு. புஞ்சிபண்டார மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தகைமைப் பெறாமைக்கு காரணமாக அமையக் கூடிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

ii. திரு. சேனாபதியை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி தேவை எனின், அதன்பொருட்டு சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

04. உள்நாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவை தமது உரிமையாகவும் மாதாந்த வருமானத்தின் ஒரு பகுதியாகவும் அனுபவித்து வருவதாக அரசாங்க முகாமைத்துவ அமைச்சுக்கு முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, அமைச்சின் விசேட புலனாய்வுக் குழுவொன்றினால் இது தொடர்பில் தேடிப்பார்க்கப்பட்டது. அதன் போது சில உத்தியோகத்தர்களின் கவனக்குறைவு மற்றும் அலுவலக முறைகள் பின்பற்றப்படாத காரணத்தினால் திணைக்களத்தில் நாளாந்தம் ஒன்றுசேரும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேலதிக நேர சேவையில் ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டது. அவ்வாறே, உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தின் முகாமைத்துவம் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பில் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு உரிய கவனம் செலுத்தாது நடவடிக்கை எடுப்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. திணைக்களத்தின் சில உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு வெளியிலுள்ள சேவைகளை புரிந்து தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை மீறி கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

i. தற்காலத்தில் இலங்கையின் அரசாங்க சேவையில் செலவு நெருக்கடி தொடர்பில் கவனம் செலுத்தி உள்நாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவை செலுத்த முடியுமான மற்றும் செலுத்தக்கூடாத சந்தர்ப்பங்கள் இரண்டு வீதம் விளக்குக. (10 புள்ளிகள்)

ii. மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பிலான அரசாங்க சேவையின் ஏற்பாடுகளை விளக்கி, உள்நாட்டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவதானிப்பு செய்யப்பட்டுள்ள மேலதிக வேலை கட்டுப்பாடு தொடர்பில் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளை கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

05. i. அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது "ஆட்சேர்ப்புத் திட்டமொன்றின்" அவசியத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒவ்வொரு பகுதிகள் தொடர்பிலும் மேலோட்டமாக விபரிக்க, (10 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புக்களில் நான்கு (04) விடயங்கள் தொடர்பில் சிறுகுறிப்பு எழுதுக.

i. அரசாங்க அலுவலர்
ii. அமய லீவு
iii. மாற்றுப் படிகள்
iv. பரஸ்பர இடமாற்றம்
v. நிரந்தர உத்தியோகத்தர்

(புள்ளிகள் 05x4= 20)

07. i. அரசாங்க சேவையில் ஆரம்ப விசாரணையொன்று எவ்வாறான சந்தர்ப்பத்தில் நடாத்தப்படும் என்பதை உதாரணமொன்றுடன் விளக்கி, ஆரம்ப விசாரணையின் போது கடைப்பிடிக்க வேண்டிய படிமுறைகளைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. தாபன விதிக்கோவையின் இரண்டாவது தொகுதியில் முதலாவது அட்டவணையையும் இரண்டாம் அட்டவணையையும் ஒப்பீட்டு ரீதியில் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

**************